**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No.4703 of 2024

Deposition of witness for

PW1

| | |
|---|---|
| Name | : Thiru. S. Balaji |
| Father's Name | : Late. V.A. Srinivasan |
| Age | : 60 Years |
| Address | : Flat 4A, CORAL SANDS, 54B/26, Beach Road, Kalakshetra Colony, Besant Nagar, Chennai-600 090. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day October of 2025 .

---

10.10.2025

PW1 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

18.5.2019 அன்று நான் தக்காராக இருப்பதற்கு அருகதை இல்லை என்று ஒரு கடிதத்தை 1ம் பிரதிவாதிக்கு வைத்தேன் என்று சொன்னால் சரிதான். 22.4.2019 அன்று சத்சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளருக்கு 2014க்கு பின்னர் நான் தலைவராக இல்லாத பட்சத்தில் தக்கார் பொறுப்பை எதற்காக என்னிடமே வைத்துக்கொண்டு தலைவர் மற்றும் செயலாளரும் ஒப்படைக்கவில்லை என்று இணை இயக்குனர் அவர்களிடம் இருந்து தலைவர் மற்றும் செயலாளருக்கு ஒரு கடிதம் வந்ததாகவும், அந்த விவரம் தெரிந்து 18/5/2019 அன்று தான் இந்த கடிதத்தை எழுதியதாக சாட்சி கூறுகின்றார். நான் சத்சங்கத்தின் தலைவராக இருந்த காரணத்தினால் தான் என்னை தக்கராக

நியமித்தார்கள் என்று சொன்னால் சரிதான். நான் 80 நாட்கள் தலைவராக இருந்தேன். எனக்கு பின்பு தலைவராக காலம் சென்ற திருமலை அவர்கள் பதவி வகித்தார் என நினைக்கின்றேன் குறிப்பாக தெரியவில்லை. எனக்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் அடுத்த ட்ரஸ்ட் போர்ட பார்ம் ஆகும் வரை தக்கராக இருக்கும்படி குறிப்பிடப்பட்டிருந்தது எனவே அடுத்ததாக திருமலை அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் நானே தக்கராக பதவியை தொடர்ந்து வகித்து வந்தேன். ஆணையர் இந்து சமய அறநிலைத்துறை அவர்களிடமிருந்து தலைவர் மற்றும் செயலாளருக்கு கடிதம் வந்த உடனேயே நான் நான் கடிதம் அனுப்பினேன். நான் தக்கராக இருப்பதற்கு தகுதி இல்லை தெரிந்த உடனேயே கடிதம் எழுதினேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய பொறுப்பை சத்சங்கத்தில் தான் ஒப்படைக்க வேண்டும் என்று எனக்குத் தெரிந்த காரணத்தினால் தான் 18.5.2019 தேதியில் கடிதத்தை நான் சத்சங்கத்திற்கு எழுதினேன் என்று சொன்னால் அது தவறு என்று சாட்சி கூறுகின்றார். 18.5.2019 தேதியிட்ட கடிதத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கின்றேன். மேற்படி கடிதம் வா.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கின்றது. வா.த.சா.ஆ. 1 ல் 01.06.2019 ற்குள் என்னுடைய பொறுப்பை எடுத்துக் கொள்ளக் கூறி எழுதி இருக்கின்றேன் என்று சொன்னால் சரிதான். 22.04.2019 தேதியில் ஆவணம் எனக்கு வரவில்லை அசல் ஆவணம் என்னிடம் இல்லாத காரணத்தினால் அதை நான் தாக்கல் செய்யவில்லை. நான் இந்து சமய அறநிலை துறைக்கு 04.07.2022 அன்று என்னுடைய ராஜினாமா கடிதத்தை அனுப்பி வைத்தேன். ராஜினாமா கடிதத்தை அனுப்புவதற்கு நாலு வருடங்கள் காலதாமதம் ஆனதற்கு காரணம் என்னவென்றால் ட்ரஸ்ட் போர்டு நான் ராஜினாமா செய்யும் வரை நடைமுறைக்கு வரவில்லை என்றும் என்னுடைய சொந்த காரணங்களுக்காகவே அந்த பதிவியை ராஜினாமா செய்ததாக சாட்சி கூறுகின்றார். எனக்கு சொந்த காரணங்கள்

எதுவும் இல்லாத பட்சத்தில் நான் தொடர்ந்து அந்த பொறுப்பில் இருந்திருப்பேன் என்று சொன்னால் கண்டிப்பாக இருந்திருப்பேன் என்று சாட்சி கூறுகின்றார். நான் என்னுடைய தாவாவில் என்னுடைய ராஜினாமாவை 04.07. 2022 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சொல்லி இருக்கின்றேன் என்று சொன்னால் அது சரியல்ல, அனுப்பியதாக தான் சொல்லி இருப்பதாக சாட்சி கூறுகின்றார். 08.03.2023 அன்று மேற்படி பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டேன் என்று சொன்னால் சரிதான். விடுவிக்கப்பட்டேன் என்பதற்கு பொருள் என்னவென்றால் எனக்குப் பின்னால் வந்த தக்கரிடம் என்னுடைய பதவி சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களையும் ஒப்படைக்கப்பட்டது என்று அர்த்தம். எனக்குப் பின்னர் முண்ட கண்ணியம்மன் கோயில் செயல் அலுவலராக திருமதி தமிழ்ச்செல்வி என்பவர் தக்கராக நியமிக்கப்பட்டார் அவரிடம் என்னுடைய பொறுப்புகளை ஒப்படைத்தேன் என்று சாட்சி கூறுகின்றார். அதற்கு பின்னர் எனக்கும் தக்கர் பதவிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் கோவிலுக்கு சொந்தமான நகைகளை ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 8 3 2023 அன்று அன்று எனக்குப் பின்னால் நியமிக்கப்பட்ட சர்க்காரிடம் கோயிலில் எனக்குள்ள பொறுப்புகளை ஒப்படைத்த பொழுது அவர் ஒரு பகுதி பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்ட காரணத்தினால் நகைகள் சம்பந்தப்பட்ட விவரங்களை அவரிடம் ஒப்படைக்கவில்லை என்று சாட்சி கூறுகின்றார். 08.03.2023 அன்று விடுவிக்கப்பட்டதாக சொல்லி இருப்பது பொய் என்று சொன்னால் அது சரியல்ல. நான் பலமுறை நகைகளை திரும்ப பெற்றுக் கொள்ளச் சொல்லி எனக்கு பின்னால் நியமிக்கப்பட்ட தக்கருக்கு கடிதம் எழுதினேன். ஆனால் அவர் 9.11.2024 அன்று தான் மேற்படி நகைகளை என்னிடம் இருந்து பெற்றுக்கொண்டார். 09.11.2024 அன்று தான் எனக்கு பின்னால் நியமிக்கப்பட்ட தக்கார் கோவில் நகைகளை என்னிடமிருந்து கேட்டார். இதற்கு நடுவில்

04.09.2024 அன்று நகை மதிப்பீட்டாளர் வந்திருப்பதாகவும் நகைகளை எடுத்துக் கொண்டு வரச் சொல்லி தமிழ்ச்செல்வி அவர்கள் எனக்கு தெரிவித்தார் நான் வந்த பொழுது நகைகளை நகை மதிப்பீட்டாளர் அளவு செய்த பின்னரும் அவர் பொறுப்பில் எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டார் என்று சாட்சி கூறுகின்றார். 6.7.2021 அன்று செயல் அலுவலர் நியமிக்க கூடாது என்று உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது என்று சொன்னால் சரிதான். நான் கோவில் நகைகளை என்னுடைய பொறுப்பில் வைத்துக்கொண்டு அமெரிக்காவிற்கு சென்று விட்டேன் என்று சொன்னால் சரிதான். நானும் செயல் அலுவலரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு என்னை இந்து சமய அறநிலைத்துறையின் ஆணையர் அவர்களே தக்கராக நியமித்ததால் அவர் அந்த பொறுப்பில் இருந்து என்னை விளக்கும் வரை நானே இந்த நகைகளை வைத்துக் கொள்வேன் என்று எனக்கு பின்னால் வந்த தக்கருக்குத் தெரிந்தே நகைகளை என்னுடைய பொறுப்பில் வைத்துக் கொண்டேன் என்று சொன்னால் அது சரியில்ல. சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை என் மீது நகைகளை குறிப்பிட்ட தேதியில் கொடுக்கவில்லை என்றால் எடுப்பேன் என்று மனு தாக்கல் செய்திருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. டிவிஷன் பெஞ்சில் நீதிமன்ற அவமதிப்பு ஏற்படுத்தியதாக அறிவிப்பு கொடுத்த பின்னர் தான் கோவில் நகைகளை எனக்கு பின்னால் நியமிக்கப்பட்ட தக்காரிடம் கொடுத்தேன் என்று சொன்னால் அது சரியல்ல மேற்படி உத்தரவில் என்னுடைய பெயரும் இடம் பெற்று இருக்கின்றது என்ன சொன்னால் சரிதான். சத்சங்கம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த பொழுது இந்து அறநிலையத்துறையின் ஆணையரை மட்டுமே எதிர் தரப்பினராக சேர்த்திருந்தார்கள் என்றும் மேற்படி வழக்கு நடந்து கொண்டிருந்த பொழுது 12.11.2024 அன்று நான் நகைகளை ஒப்படைத்த பின்னரும் என்னுடைய பெயரும் மேற்படி வழக்கில் தொடர்ந்து அடிபடுவதாக

சொல்லி உயர் நீதிமன்றம் தானாக முன்வந்து 26.11.2024 அன்று நீதிமன்றத்திற்கு வர வேண்டும் என்று சொல்லி அந்த வழக்கில் என்னையும் ஒரு தரப்பினராக சேர்த்தார்கள் என்று சாட்சி கூறுகின்றார். நான் மேற்படி உத்தரவை உயர்நீதிமன்றம் பிறப்பித்த காரணத்தினால் தான் நகைகளை திருப்பி ஒப்படைத்தேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் கோவிலில் தக்கராக இருந்த பொழுது கோவிலின் வருமானத்தை தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் அதற்கு எனக்கும் சம்பந்தம் கிடையாது செயல் அலுவலர்தான் வருமான வரி சம்பந்தப்பட்ட விவரங்களை பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சாட்சி கூறுகின்றார். 2018-2019 ஆம் வருடத்தில் நான் ஒரு கோடியே 6 லட்சம் ரூபாய் பாக்கி வைத்ததாக வருமானவரித் துறையிலிருந்து அறிவிப்பு வந்தது என்று சொன்னால் எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை அது செயல் அலுவலருக்கு வந்திருக்கும் என்று சாட்சி கூறுகின்றார். கோவிலின் வரவு செலவு கணக்கிற்கு நானும் ஒரு பொறுப்பு வைத்திருந்தேன் என்று சொன்னால் அது சரியல்ல. கோயிலின் நிர்வாகம் மட்டுமே என்னுடைய பொறுப்பில் இருந்தது என்று சாட்சி கூறுகின்றார். நான் செயல் அலுவலரையும் என்னையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே கோயிலின் வரவு செலவு கணக்கு எனக்கு எந்த பொறுப்பும் இல்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. 80 நாட்கள் மட்டுமே தலைவராக இருக்க முடியும் என்பது தெரிந்து கொண்டு தக்கர் பதிவுக்கு நியமிக்கப்பட்டேன் என்றும் ஆனாலும் ஆணையர் இந்து சமய அறநிலைத்துறை அவர்களையும் செயல் அலுவலரையும் கையில் வைத்துக்கொண்டு சுமார் 9 வருடங்கள் அந்த பொறுப்பில் இருந்தேன் என்று சொன்னால் அதை மறுப்பதாக சாட்சி கூறுகின்றார். நகை மதிப்பீட்டாளர் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காகவே கோவில் நகைகளை ஒப்படைக்கவில்லை என்று சொல்லி இருக்கின்றேன் என்றும் எனக்கு நகை மதிப்பீட்டாளரே கிடைக்கவில்லையா என்று

சொன்னால் அதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்றும் கோவில் நிர்வாகம் தான் நகை மதிப்பீட்டாளரையே நியமிக்க வேண்டும் என்றும் சாட்சி கூறுகின்றார். வா.த.சா.அ.1ல் ல் ஆணையர் இந்து சமய அறநிலைத்துறை அவர்கள் தக்கர் பொறுப்பில் இருந்து விடுவிக்கும் உத்தரவை பிறக்கும் வரை நான் அந்த பொறுப்பிலேயே இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. உரிய நடவடிக்கை (necessary formality ) எடுத்த பின்னரே தன்னிடமிருந்து மேற்படி பொறுப்பை எடுத்துக்கொள்ள சொல்லி எழுதி இருப்பதாக சாட்சி கூறுகின்றார்.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

*Sd/-K.Geetharani,M.A.,M.L.,*

10.10.2025

III Addl. Sessions Judge.
II Additional Sessions Court (FAC)
City Civil Court, Chennai.